**நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.எஸ்.பன்னீர்செல்வம், பி.எஸ்ஸி.,(விவ)**

**எண்:அ2/2524/2019** **நாள்: 06.11.2019**

பொருள்: பணிக்குழு- தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4ல் அடங்கிய பணிகள் - நேரடித் தேர்வு 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆண்டில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்கள் - பணி வரன்முறை செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அறிபி.5/139388/2018 நாள் 05.03.2019
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ2/2524/2019 நாள் 07.03.2019
3. சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களது கடிதம் எண். அபபி3/23567/2019 நாள்: 04.11.2019

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி இம்மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளர்களை பார்வை 3ல் காணும் சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களது கடிதத்தில் காணும் அறிவுரைகளின்படி இப்பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணைய வ.எண் | பெயர் / பதவி<br>தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | 8 | திரு. ஜி. ஆதித்யன்,<br>இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம் | 11.03.2019<br>மு.ப | 11.03.2019<br>மு.ப |
| 2. | 138 | திரு. கே. கிருஷ்ணபிரபு,<br>இளநிலை உதவியாளர்<br>வேளாண்மை உதவி இயக்ககம், கீழ்வேளூர் | 18.03.2019<br>மு.ப | 18.03.2019<br>மு.ப |
| 3. | 274 | திரு. எஸ். அன்பழகன்,<br>இளநிலை உதவியாளர்,<br>வேளாண்மை உதவி இயக்ககம், வேதாரண்யம் | 08.03.2019<br>மு.ப | 08.03.2019<br>மு.ப |
| 4 | 4 | திரு. ஜெ. புருஷோத்தமன்,<br>இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம். | 11.03.2019<br>மு.ப | 11.03.2019<br>மு.ப |

இவ்வுத்தரவு, சென்னை மற்றும் மதுரை உயர்நீதி மன்ற கிளைகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தொகுதி IVல் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டில் பணி நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது எனவும் உத்தரவிடப்படுகிறது.

...2...

மேற்கண்டவாறு இப்பணியாளர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- சா. பன்னீர்செல்வம்,
வேளாண்மை இணை இயக்குநர்(பொ),
நாகப்பட்டினம்.

பெறுநர்:
மேற்காணும் பணியாளர்கள், தொடர்புடைய வேளாண்மை உதவி இயக்குநர்கள் வழியாக..

வழி மற்றும் நகல்:- வேளாண்மை உதவி இயக்குநர் கீழ்வேளூர், மற்றும் வேதாரண்யம்.

நகல்:- வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.(அபபி3பிரிவு)
நகல்:- 'அ2' இருப்பு கோப்பிற்கு'

// உத்தரவின்படி //

கண்காணிப்பாளர்